பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 33 யாழ்ப்பாணம் | வைகாசி 1 புதன்கிழமை | ஜ-ல்ஹஜ் 28 | இதழ் 94 14-5-80

UNIVERSITY OF JAFFNA CAMPUS LIBRARY RECEIVED 1980-5-14 PERIODICALS DIVISION

## கோடி ரூபா பெறுமதி இந்து விக்கிரகங்கள்

# சர்வதேசக் கொள்ளைக் கோஷ்டி கைது!

(புதுடில்லி)

இந்து தெய்வங்களின் விக்கிரகங்களைத் திருடும் சர்வதேச கொள்ளைக் கோஷ்டியொன்றை இந்தியப் பொலிசார் கைது செய்துள்ளனர். எழுவர் அடங்கிய இக்கொள்ளைக்கோஷ்டியில், ஒருவர் நேபாள நாட்டைச் சேர்ந்தவர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஜம்மு—காஷ்மீரில் உள்ள இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்பட்டபோதே இக்கொள்ளைக் கோஷ்டியினர் அகப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கொள்ளைக்கோஷ்டியினர் மூவாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த 32 விக்கிரகங்களைத் திருடியதாகவும், இவற்றின் பெறுமதி ஒரு கோடி ரூபா என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இக்கோஷ்டியினர் சர்வதேச கடத்தல்காரர்களுக்கு இந்த விக்கிரகங்களைப் பெருந் தொகையான பணத்துக்கு விற்பனை செய்வதாகவும், அதிகமான விக்கிரகங்கள் சிவன், புத்தர், மகாவிஷ்ணு ஆகியவை என்றும் தெரிவிக்கப்பட்டது.

★ ஐ. தே. கட்சி அரசுக்கு

# வடக்கு, தெற்கு பேதம் கிடையாது!

## சகல மக்களுக்கும் எல்லாம் உண்டு

### படகு ஆரம்ப விழாவில் பிரதி அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

"ஐக்கியதேசியக்கட்சி ஆட்சிக்கு வந்த மூன்று ஆண்டு காலத்திற்குள் வடக்கு, தெற்கு என்று வேறுபாடின்றி ஒரே மாதிரியான கண்ணோட்டத்துடன் அரசு ஆட்சி செலுத்தி வருகிறது. அதனால் தான் கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த தமிழ் எம். பி.க்கள் எம்முடன் சேர்ந்து மந்திரிப் பதவிகளைப் பெற்று தமது பகுதிகளை அபிவிருத்தியடையச் செய்துவருகின்றனர். வட பகுதி எம். பிக்களும் எம்முடன் சேர்ந்து வடபகுதியையும் ஏனைய பகுதியையும் அபிவிருத்தியடையச் செய்ய முன்வரவேண்டும்''

எட்டு லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட குறிகட்டுவான் - நெடுந்தீவு 'மணிமேகலை' யந்திரப் படகு சேவையை நேற்று ஆரம்பித்து வைத்துப் பேசிய நெடுஞ்சாலைகள் பிரதிஅமைச்சரும் மாவத்தகம எம். பி.யுமான திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா மேற் கண்டவாறு கூறினர்.

குறிகட்டுவான் துறையில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ குலநாயகம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு யு. பி விஜயக்கோன் யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆகியோரும் யாழ் செயலக உயர் அதிகாரிகள், நெடுஞ்சாலைகள் அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

காலை 11 மணிக்கு பிரதி அமைச்சர் 'மணிமேகலை' அரச யந்திரப் படகை ஆரம்பித்து வைத்தார்.

பிரதிஅமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, "இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த மணிமேகலை நயினாதீவில் தங்கி பௌத்த பிக்குணியாகமாறி அமைதியையும், சமத்துவத்தையும் சமாதானத்தையும், ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் உண்டாக்கப்பாடுபட்டார். அவரின் பெயரில் தாங்கிச் சேவையில் ஈடுபடுத்தப்படும் இப்படகும், தமிழ் சிங்கள மக்களின் உறவைப்பலப்படுத்தும் ஒருசாதனமாக அமையப்போகிறது.

"எமது ஆட்சியில் சகல மக்களுக்கும் சமத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது தமிழன், சிங்களவன் என்றோ, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றோ, ஏழை பணக்காரன் என்றோ எத்தவித பாகுபாடும் காட்டப்படுவதில்லை. ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரின் தொகுதி எவ்வாறு அபிவிருத்திசெய்யப்படுகிறதோ, அதேபோல, எதிர்க்கட்சி உறுப்பினரின் தொகுதியும் அபிவிருத்தி செய்யப்படுகிறது. கடந்த அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்ததால், எதிர்க்கட்சியினரின் தொகுதிகள் கவனிப்பாரற்றுக்கிடந்தது.

"ஒருசில அரசியல்வாதிகள் யாழ்ப்பாணம் வேறு, தென் இலங்கைவேறு என்றுகூறி வகுப்புவாதத்தை உண்டாக்கி

(8-ம் பக்கம் பார்க்க)

## முதலிடம் பெற்றார்

(கொழும்பு)

இலங்கைச் சட்டக்கல்லூரித் தமிழ்மன்றம் நடத்திய (எழுத்தயான) கவியரங்கப் போட்டியில் திரு வி.ரி. தமிழ் மாறன் முதலிடம் பெற்றுள்ளார், 1980ம் ஆண்டுக்கான மன்றத்தின் 'ஆஸ்தான கவி' விருதைப் பெற்றுள்ள இவர் மன்றத்தின் ஆண்டுக்கலைவிழாவின் போது 'பொற்கிழி' வழங்கிக்கௌரவிக்கப்படவுள்ளார்.

"சங்கானை

## பஸ்நிலையத்தில் கடைகள் அமைக்கக்கூடாது'

### வரியிறுப்பாளர் சங்கம் தீர்மானம்

(சங்கானை)

சங்கானை பஸ் நிலையத்தில் எவ்விதகடைகளும் கட்டக்கூடாதென்ற தீர்மானம், சங்கானை பட்டணசபை வரியிறுப்பாளர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

முன்னாள் சங்கானைபட்டணசபைத்தலைவர் திரு. எஸ்.கே. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேறின.

சங்கானை பட்டணசபையின் சமீபத்திய நியமனங்கள் பற்றி பூரணவிசாரணை நடத்தப்படவேண்டும்.

[8ம் பக்கம் பார்க்க]

# 1,25,000 ரூபா பீடி இலை கடற்படை கைப்பற்றியது!

### ஐந்துபேருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை கடலில் வைத்து ஒரு லட்சத்து 25,000 ரூபா பெறுமதியான 31 மூடை பீடி இலைகளையும், ஒரு படகையும் கைப்பற்றிய கடற்படையினர், சந்தேகத்தின் மீது ஐந்துபேரைகைது செய்தனர்.

படகு, பீடி இலைகளுடன் ஐந்து சந்தேக நபர்களையும் ஊர்காவற்றுறை சுங்க இலாகாவிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

சட்கலெக்டர் ரி. ஆர். சிவம் தலைமையில் சுங்க அதிகாரிகள் ம. அசோகன், திலக் பெரேரா ஆகியோர் விசாரணை நடத்தி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பேரில் மேலதிக உதவி சுங்க சேகரிப்பளோர் திரு இ. சபாரத்தினம் பீடி இலைகளையும் படகையும் பறிமுதல் செய்ததுடன், சந்தேக நபர்களுக்கு தலா 1,000 ரூபா அபராதம் விதித்தார்.

அச்சுவேலிக் கொலைவழக்கு

## "இறந்தவர் பஸ்நிலையத்தில் 5ம், 6ம் எதிரிகளுடன் நின்றார்"

### சகோதரன் சாட்சியம்

(மாவிட்டபுரம்)

"அச்சுவேலி பஸ் நிலையத்தில் சனக்கூட்டமாக இருந்த நேரத்தில் கொலையுண்டவர் 5ம், 6ம் எதிரிகளுடன் அங்கு நின்றிருந்தார். அவர்கள் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தனர். கொலையுண்டவருக்கும் எதிரிகளுக்கும் பகை இருந்ததில்லை.

இவ்வாறு அச்சுவேலி கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கொலையுண்டவரின் சகோதரரான சுப்பையா சிவராசா கூறினர்.

அச்சுவேலியைச் சேர்ந்த சுப்பையா துரைராஜா என்பவரை ... இராஜதுரை, ஜோசெப் நடராசா, குட்டியன் இரத்தினம், மூத்தன் கார்த்திகேசு, சிவலை துரைச்சாமி, முத்தன் விமல், கிட்டினன் தாராசிங்கம், சின்னட்டி சிவியன் ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் இறந்தவரின் சகோதரரான சுப்பையா சிவராசா சாட்சியமளித்தார்.

அவர் மேலும் கூறியதாவது- அச்சுவேலி ப. நோ. கூ. சங்கத்தில் விதைஉருளைக் கிழங்கு வாங்குவதற்காக வந்த நான் உருளைக்கிழங்கை வாங்கி லொறியில் ஏற்றிவிட்டு வீடு திரும்பும்போது அச்சுவேலி பஸ்நிலையத்தில் 5ம், 6ம் எதிரிகளுடன் கொலையுண்டவர் கதைத்துக்கொண்டிருப்பதைக் கண்டேன். கொலையுண்டவர் மதுஅருந்துவது வழக்கம். ஆனால் கடுமையாக குடிப்பார் என்று கூறமுடியாது. கடுமையாக குடிப்பார் என பொலிசில் அளித்த வாக்குமூலத்தில் நான் தெரிவிக்கவில்லை.

அடுத்து எத்தையா மகாதேவன் என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 20-11-79 பிற்பகல் 4-30 மணியளவில் வெங்காயம் ஏற்றிக்கொண்டு லொறியில் கொழும்

[8ம் பக்கம் பார்க்க]

திடீர்விஜயத்தின் எதிரொலி:

## கல்விப் பணிப்பாளருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள இராமநாதபுரப் பகுதிக்கு நேற்று திடீர் விஜயம் மேற்கொண்ட வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இ. மாணிக்கவாசகர், அப்பகுதிகளிலுள்ள பல பாடசாலைகள் இயங்கும் நிலைமை குறித்து அதிர்ச்சியடைந்தார்!

திரு. இ. மாணிக்கவாசகருடன், பிரதம கல்வியதிகாரி ஜனாப் எம் எம். மன்சூர், கிளிநொச்சி கல்வியதிகாரி திரு. பா. சண்முகம் ஆகியோரும் சென்றிருந்தனர்

இவர்கள் குறிப்பிட்டபகுதியிலுள்ள 6 பாடசாலைகளுக்கும் திடீர் விஜயம் செய்தபோது, காலை பத்து மணியாகியும் மாணவர்களின் இடாப்புகள் பதிவுசெய்யப்படாதது கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

கடமை நேரத்தில் ஆசிரியர்கள் பாடசாலைகளில் இல்லாதது, கையெழுத்து வைத்த ஆசிரியர்கள் சிலரின் "திடீர் மறைவு', அதிகாரிகள் அந்த நேரத்தில் இல்லாதது ஆகிய விஷயங்கள், கல்விப்பணிப்பாளருக்கு பேரதிர்ச்சியை உண்டாக்கியது!

திரு இ மாணிக்கவாசகர் அங்கு நடத்திய விசாரணைகளில், மாணவர்கள் ...

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் 1பரப்புக்காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: பெருமாள்பிள்ளை நிலாமேஸ்வரன், 6/5, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர். 5765

கட்டுடை, தம்பிராயில் 20 பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு. திருமதி செல்வத்துரை கட்டுடை, மானிப்பாய். 5766

### தேவை

நல்ல அனுபவமுள்ள தேநீர் தயாரிப்பாளர் உடன்தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில்வரவும். கபே பூம்புகார், 116, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 5758

I. C. M. A. Section A. B. பரீட்சைக்குரிய பாடப்புத்தகங்கள், லண்டனிலிருந்து எடுப்பிக்கப்பட்ட பாடக்குறிப்புகள் விற்பனைக்குண்டு. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 5749, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5749

லசரக்குக்கடையில் சாமான் நிறுத்துக் கொடுப்பதற்கு 18 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் தேவை. ஐ. சபாரெத்தினம்ஸ் 332A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5754

ஒருமாதகாலத்தில் சைக்கிளில் இந்தியா, பாகிஸ்தான் இங்கிலாந்து வரை செல்ல விரும்பும் வாலிபருக்கு இதே நோக்கத்தையுள்ள ஒரு வாலிபரின் துணை தேவைப்படுகின்றது விரு புவோர் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்புகொள்ளவும் M. ராகவன், C/o, B, மகிந்தா, கென்ஸ்ல்மன் வீதி, சாவகச்சேரி. 5764

### பகிரங்க ஏலவிற்பனை

பாவிக்கப்பெற்ற பழைய புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், சுட்ட மின்சார பல்புகள், மற்றும் பழைய சாமான்கள் எதிர்வரும் 27 5-80-ம் திகதி பிற்பகல் 2-00 மணியளவில் சாவகச்சேரி நகரசபை வளவில்வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். கூடிய கேள்விக்காரர் உடன் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக் கொண்டதும் பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும்.

எஸ். கே. திரவியநாயகம், தலைவர், நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம், சாவகச்சேரி, 12-05-1980 5760

### தவறிவிட்டது

25 சிறி 5994 இலக்க உழவு யந்திரத்தின் ரக்ஸ், இன்சூரன்ஸ், அடங்கிய சிவப்பு பிளாஸ்ரிக் கூடை, யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும், வல்லிபுரம் கனகசபை, குடத்தனை. 5753

## வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 4000க்கும் மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 25/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப் பத்திரத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சீல் வைத்த கேள்விப் பத்திரங்களாவும் 24-5-80-ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம் "தலைவர், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

தலைவர்

கரவெட்டி, 10-5-80 5751

## 31ம்நாள் நினைவுதினம்
(14-5-80)



திருமதி எலிசபெத் (நல்லபிள்ளை) செபமாலை
(இளைப்பாறிய ஆசிரியை கிறிஸ்தவகல்லூரி, கோப்பாய்)

பிறப்பு: 2-1-1935 இறப்பு: 14-4-1980

இவரின் பிரிவால் துயருறும்

கணவன்: எஸ் எஸ். செபமாலை
மக்கள்: பிறின்ஸ் செல்வகுமார் சாள்ஸ் சாந்திகுமார்,
மருமகள்: பிறின்ஸ் பத்மாதேவி

நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

5752

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ஈடு / 1313.

1. சின்னத்தம்பி நடராசாவும் வேறு
2. பாக்கியலட்சுமியும்

தமிழ்ப்பாடசாலை, ஒழுங்கை, மல்லாகம் — வாதிகள்

எதிராக

1. சின்னத்தம்பி வல்லிபுரமும் வேறு
2. சின்னத்தங்கச்சியும், நாச்சிமார் கோவிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். — பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1980ம் ஆண்டு ஆனிமாதம் 18-ந் திகதி (18-6-1980) புதன்கிழமை 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிகளுக்கு ரூபா 3750/-வும் மேலும் ரூபா 2000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டிவிதம் வழக்கு அணைந்த திகதியாகிய 1976-ம் ஆண்டு ஆடிமாதம் 7-ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 29-ம் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீதவட்டியும், வழக்குச்செலவு ரூபா 510·80 கொடுக்கவேண்டியிருப்பதாலும் இதுவரை செலுத்தப்பட்ட ரூபா 2400/- தீர்வைத் தொகையிலும் ரூபா 150/- செலவுத் தொகையிலுமாக மொத்தம் ரூபா 2550/ கழித்து மிகுதியை அறவிடப்படும்

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை "மகியான் கட்டி" பர. நில. இல. 6-ம் இதில் தெற்குப் பக்கமாக பர. நில இலாச்சம் மூன்றும் (3) வீடும் மாடங்களும் வான்பயிரும் செய்பயிரும் இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு மிகுதிபாதனம் மேற்கு சதையா இராமலிங்கத்திற்கும் வேறு நாகமுத்துவுக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைப்படி இடம் நிலமும்.

சி. ஆ. த. வடிவேலு, ஜே. பி.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், விலைமதிப்பாளரும்.

"வமவேல் உதயம்"
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில், 22-4-1980 5763


உலகப் பிரசித்தி பெற்ற
'ஹொண்டா'
மோட்டார் சைக்கிள்களுக்கு
யாழ் மாவட்ட விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளோமென மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்
சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்.
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



குடும்பத்திலுள்ள அனைவருக்கும் தேவையானது!
ஒவ்வொரு இல்லங்களிலும் இருக்கவேண்டியது!!
தேமஸ்!!! THERMOS சகல அளவுகளிலும் இறக்குமதியாகியுள்ளது
தேமஸ் பிளாஸ்குகள்
பிளாஸ்ரிக், தகர கொள்கலனுடையது

| | | |
|---|---|---|
| அரை பைந் (பிளாஸ்ரிக்) பிளாஸ்குகள் | ரூபா | 61-00 |
| ஒரு பைந் (பிளாஸ்ரிக்) பிளாஸ்குகள் | " | 72-00 |
| ஒரு பைந் (தகரம்) பிளாஸ்குகள் | " | 67-00 |
| இரண்டு பைந் (தகரம்) பிளாஸ்குகள் | " | 95-00 |
| பிளாஸ்ரிக் ஜக் அமைப்பு பிளாஸ்குகள் | " | 152-00 |
| குழந்தைகளுக்கான பிளாஸ்குகள் (போச்சி வைக்கக்கூடிய) | " | 74-00 |

நீடித்த பாவனை!
அதிக ஒளிச்சக்தியுடையது!!
'றெட்ஹாட்' பெற்றோல்மக்ஸ்
சில்லறை விலை ரூ. 375 00
மொத்தமாகவும் — சில்லறையாகவும் கிடைக்கும்
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு
விரையுங்கள்!
முகமதலி அப்துலலி
5, 7, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 515



தேவை
பெண் விற்பனையாளர்கள்
நம்பிக்கையும், நாணயமும், நற்பழக்கமும், தேகசுகமும், தமிழ், ஆங்கில அறிவுமுள்ள பெண் விற்பனையாளர் தேவை. நகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் தகுந்த நற்சாட்சிப் பத்திரங்களுடன் 19-5-80க்கு முன் விண்ணப்பிக்கவும்.
ராஜு ஸ்ரோர்ஸ்,
67 & 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## ஐ. நா. சபையில் ராஜதந்திரிகளுக்கு மை அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமெரிக்க, சோவியத் பிரதிநிதிகளுக்கு உடல் முழுவதும் மை பூசப்பட்டது. அமெரிக்க புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இரு பத்திரிகையாளர்கள் இவ்வாறு மை பூசினார்கள்.

கடந்த வாரம் (வியாழக்கிழமை) நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதம சோவியத் பிரதிநிதி திரு. ரொயனு நோவெஸ்கி, அமெரிக்க உதவிப் பிரதிநிதி திரு. வில்லியம் வாண்டன் கூவெல் ஆகியோர் மீது மை பூசப்பட்டது.

அமெரிக்கா, ரஷ்யா இரு நாடுகளும் ஏகாதிபத்தியங்கள் எனக் காட்டுவதற்காக அமெரிக்க புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியினர் இவ்வாறு சிவப்பு மை (சாயம்) பூசும் நடவடிக்கையை மேற்கொண்டார்கள் எனத் தெரிகிறது.

இக்கட்சியினர் திரு என். சண்முகதாசன் தலைமையிலுள்ள இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளார். கடந்த மேதினம் அக்கட்சி திரு சண்முகதாசனுக்கும் அவர் தலைமையிலான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்திருந்தனர்.

## நெஞ்சு வலியால் இளம் பெண் நஞ்சுக்குப் பலி

(புலோலி)

நோய் குணமடையவில்லையே என மனமுடைந்த இளம் பெண் ஒருவர் நச்சுத்திரவ மருந்தித் தற்கொலை செய்து கொண்ட பரிதாபகர சம்பவமொன்று பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த சாரையடி என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது

இந்திராதேவி கந்தசாமி (வயது 24) என்ற இளம் பெண்ணே நோய் குணமடையவில்லையே என்பதனால் மனமுடைந்து நச்சுத் திரவமருந்தித் தற்கொலை செய்து கொண்டவராவார்.

பருத்தித்துறை பதில் நீதவான் திரு. கே. கே. பாலசுப்பிரமணியம் மரணவிசாரணையை மேற்கொண்டார். பருத்தித்துறைப் பொலிசார் சாட்சியங்களை ஆஜர் செய்தனர்.

இறந்தவரது தாய் நல்லபிள்ளை சாட்சியமளிக்கையில் இறந்தவர் எனது மகள் எனக்கு எட்டுப் பிள்ளைகள் இருக்கிறார்கள். இறந்தவர் திருமணம் செய்யவில்லை. இறந்தவருக்கு நெஞ்சு வருத்தம் இருந்து வந்தது அதற்கு சிகிச்சையளிக்கப்பட்டும் வருத்தம் குணமடையவில்லை. சம்பவதினம் இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு நாங்கள் படுக்கைக்குச் சென்றோம். சற்று நேரத்தின் பின்னர் நித்திரையாகக் கிடந்த என்னையெழுப்பிய இறந்தவர் தான்வெளியே போய் வருவதாகக் கூறிச் சென்றார் வெளியேபோய்வந்த அவர் கடுமையாக வாந்தி எடுத்தார். அப்போது நான் என்னவென்று கேட்டபோது தான் மருந்து குடித்துவிட்டதாகக் கூறினார். எனினும் இவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

விசாரணையின்பின் மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பேரின்பம் உனக்குச் சொந்தம். ஆத்மசாம்ராட் ஆக உனக்கு உரிமையுண்டு

—சுவாமி சிவானந்தர்

# வடக்கின் ஒரேயொரு தீப்பெட்டித் தொழிற்சாலையும் மூடப்படலாம்!

## இறக்குமதியால் விற்பனை பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தீப்பெட்டி உற்பத்தித் தொழிற்சாலை தொடர்ந்து பலத்த நஷ்டத்தில் இயங்கிவருவதால் அதை மூடிவிடுவது பற்றி சங்கம் விரைவில் கூடி இறுதி முடிவு எடுக்குமென்று தெரிவிக்கப்படுகின்றது. வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஒரே ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையான பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தின் இத்தொழிற்சாலை பாதுகாப்பு காரணங்களுக்காக அச்சுவேலியிலுள்ள அரசாங்க கைத்தொழிற்பேட்டையில் இயங்கி வருகின்றது. இதற்கு வாடகைப் பணமாக மாதம் மூவாயிரம் ரூபா சங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை சங்கத்திற்கு சுமார் எட்டு இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதென்றும் தொடர்ந்தும் இந்த நஷ்டத்தை சங்கம் தாங்கிக் கொள்ள முடியாது என்றும், இத்தொழிற்சாலையின் எதிர்காலம் பற்றி ஆராய உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் அறிக்கை கிடைத்தவுடன் இறுதி முடிவு எடுக்கப்படுமென்றும் மேற்படி சங்கத் தலைவர் திரு. எஸ். கந்தையா இதுபற்றி 'ஈழநாடு' பத்திரிகை நிருபரிடம் தெரிவித்தார்.

### இறக்குமதியால் பாதிப்பு

வெளிநாட்டு இறக்குமதித் தீப்பெட்டிகளினால் இங்கு உற்பத்தியாகும் தீப்பெட்டிகளின் விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் உற்பத்தி செய்யப்பட்ட பெருந்தொகையான தீப்பெட்டிகள் விற்க முடியாது தேங்கிக்கிடப்பதாகவும் இத்தொழிற்சாலைக்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார். இத்தொழிற்சாலை மூடப்படும் பட்சத்தில் சுமார் 200-க்கு அதிகமான ஆண், பெண் ஊழியர்கள் வேலை இழக்க நேரிடும் என்றும் துண்டுக்கூலி முறையில் இதை நடத்தினால் ஓரளவு நட்டமில்லாத முறையில் நடாத்த முடியும் என்றும் தொழிற்சங்கப் பிரமுகர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

மிகவும் கஷ்டப்பட்டு பல் வேறு சிரமங்களுக்கு மத்தியில் பெரும் பொருட் செலவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை மூடப்படாது இருக்க யாழ்.மாவட்ட அமைச்சர், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர், வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. ஆகியோர் கூட்டாக நடவடிக்கையில் உடன் இறங்க வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

## மக்கள் கருத்து!

### யாழ். பொதுசன நூலகம்

நூல் நிலையம் என்பது ஒரு கலைக்கூடம். இங்கு அமைதி நிலவவேண்டியது அவசியம். இந்த இடத்தில் இலங்கையிலே கட்டிடத்தால் முதல் இடம் பெறுவது யாழ். பொதுசன நூலகமாகும். பல பிரிவுகளைக் கொண்ட இந்த நூலகத்தில் பல உத்தியோகத்தர்கள் கடமை புரிகின்றார்கள். எங்கு பார்த்தாலும் அமைதி அமைதி என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் பலகை போடப்பட்டுள்ளது நான் எட்டு வருடங்களாக இந்த நூல் நிலையத்தில் அங்கத்தவராக இருக்கின்றேன்.

குண்டூசி விழுந்தாலும் கேட்கும் அளவிற்கு அமைதி நிலவ வேண்டிய இந்நூலகத்தில் 18-4-80 வெள்ளிக்கிழமை மதியம் 1-30 மணியளவில் யாழ். நூலக இரவல் கொடுக்கும் பகுதிக்குப் புத்தகம் ஒப்படைக்கச் சென்றேன். அங்கே நான் போகும்போது இரவல் கொடுக்கும்பகுதி ஒரு சண்டைப் பயிற்சி நிலையமாக மாறி பெரிய சத்தமாயிருந்தது. வாசகர்கள் சண்டையை வேடிக்கை பார்ப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. சம்பந்தப்பட்டவர்கள் இந் நூலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் இருவர் "வேலியே பயிரை மேய்ந்தால் காவல்காரன் யார்" என்ற அளவிற்கு அந்த இடத்தில் பேசப்பட்டது சண்டையைச் சமரசப்படுத்தப் பல மணி நேரம் எடுத்தது. இந்த இடத்தில் நூலகத்தில் எந்த மேலதிகாரிகளோ அல்லது நூலகரோ அங்கே இருந்ததாகத் தெரியவில்லை.

இப்படியான நிலையை மாற்றி ஊழியர்கள் தங்களுக்குள் ஒற்றுமையை வளர்த்து நல்ல முறையில் நூலகத்தை இயங்கச் செய்வார்களா?

மேலும் நூலகம் காலை 8 மணிக்குத் திறக்கப்படுகின்றது. திறப்பதற்கு முன்னரே நூலகம் சுத்தம் செய்யப்பட வேண்டும். ஆனால் இங்கே 8-30 மணியாகியும் கூட்டு வேலைகள் முடிவதில்லை. வாசகர்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிக்கும்போது எழும்பு, இரு, அப்படிப்போ, இப்படிப்போ என்று கூட்டுபவர் சொல்வது மிகவும் அருவருப்புக்குரியது. நூலகம் திறப்பதற்குமுன் இவைகளைச் செய்ய முயற்சி எடுக்கவேண்டும். இதனால் வாசகர்களுக்கு எந்த இடைஞ்சலும் வராது. எல்லாவற்றையும் சீராக்கி சிறந்த முறையில் நூலகத்தை நடாத்துவது நூலகர் கடமையாகும். நூலகர் இதனைக் கவனிக்காது விட்டால், மாநகர முதல்வர், ஆணையாளராவது கவனிக்கவேண்டுகின்றேன்.

சி. விக்னேஸ்வரன்
ஆடியபாதம் வீதி,
யாழ்ப்பாணம்.

# 'தமிழ்மக்களின் விடிவுகாலம் இளைஞர்கையில் தங்கியுள்ளது'

## பாஷையூரில் குமார் உரை

(அரியாலை)

பின்தங்கிய பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர பொருளாதார வளர்ச்சி அவசியமாகுமென்று நாம் அன்று கூறிய பொழுது எம்மைப்பார்த்து எள்ளி நகைபாடியவர்கள் இதனை இன்று ஒப்புக் கொள்ளத் தொடங்கியுள்ளனர் மாற்றுக் கட்சிகள் பொருளாதாரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து எம்மை மூத்திவிடப்பார்க்கும் இந்த நேரத்தில் நாம் பொருளாதாரத்துக்கு முக்கிய இடம் கொடுக்காமல் மேடைப் பேச்சுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மிகவும் வருந்தக் கூடியதாகும். தமிழ் மக்களின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தால் தான் இந்த நாட்டில் தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழமுடியும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கத்தின் 18 வது ஆண்டு மக்கள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. ஞானதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. குமார் பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

"தமிழ் மக்களின் வாழ்க்கைக் கலைகளோடு இணைந்ததாகும் கலை கலாச்சாரம் என்பன வளர்ச்சியடைந்தால் தான் தமிழர் சமுதாயம் இந்த நாட்டில் தலைநிமிர்ந்து வாழமுடியும் தமிழ்மக்களின் கலை கலாச்சாரம் என்பவற்றோடு மொழி இரண்டறக்கலந்துள்ளது இவை வளரவேண்டுமானால் நமது மொழி வளர்ச்சியடைய வேண்டும் மொழி வளர்ச்சியடைய வேண்டுமானால் நமது மொழியைநாம் பேணிக்காப்பாற்ற வேண்டும் எமது மொழியையும் கலை காலச்சாரங்களையும் பேணிப்பாதுகாக்க இளைஞர்கள் முன்வர வேண்டும் இளைஞர்களின் கையில் தான் தமிழ்மக்களின் விடிவுகாலம் தங்கியுள்ளது" என்றார்

இன்னும் பலர் கூட்டத்தில் பேசினார்கள். (அ)

### பண்ணிசை பயிற்சி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்து இளைஞர் இயக்கம் பண்ணிசை பயிற்சி வகுப்பை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இப் பண்ணிசை பயிற்சி வகுப்பில் ஆரம்பத்தில் 20 பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள் என்று இயக்கத்தலைவர் திரு.யோகீஸ்வரன் தெரிவித்தார்.

### இளந்தமிழர் மன்றம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை இளந்தமிழர் மன்ற புதுவருட நிர்வாகிகள் தெரிவு காங்கேசன்துறையிலுள்ள மன்ற பணிமனையில் நடந்தபோது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர் கனக மகேந்திரா உபதலைவர் செ கனகநாயகம் செயலாளர் சி. தவபாலரத்தினம் உபசெயலாளர் யூ மரியதாஸ் பொருளாளர் பூ தேவராசா கலைத்துறை செயலாளர் பொன். கணேசமூர்த்தி விளையாட்டுத்துறை செயலாளர் சி. இந்திரசெல்வம் உறுப்பினர்கள் 11 பேர். (அ)

# "அறிவிருத்திக்கு ஆங்கிலம் அவசியமாகும்"

(அரியாலை)

"விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களை மேல் வகுப்பில் தாய்மொழியில் கற்றுக்கொள்ளும் மாணவர்களின் அறிவை விருத்தி செய்ய ஆங்கில அறிவு அவசியமாகிறது. ஓரளவு ஆங்கில அறிவு இல்லாவிட்டால் நாம் நமது அறிவை விருத்தி செய்யமுடியாது என்பதை இன்று எங்கும் மறுக்கமுடியாது. ஓரளவு ஆங்கில அறிவு இல்லாமல் நாம் நமது அறிவை விருத்திசெய்ய முடியாது. தாய்மொழிமூலம் கல்விப் போதனை வேண்டுமென்று கூறியவர்களே கூட இன்று ஆங்கில பாடமும் மாணவர்களுக்குப் போதிக்க வேண்டுமென்று கூறிவருகின்றனர்."

இவ்வாறு மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. எம். மரியதாஸ் ஒரு ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. என். இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. மரியதாஸ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: கல்லூரியின் மாணவர்களின் கல்வித்தரத்தை ஆரம்ப முதல் வளர்ந்துவருகின்றன. மாணவர்களின் ஆற்றலுக்கும் செயல்பாட்டுக்கும் ஏற்ப அங்கு கல்வி போதிக்கப்படுகின்றன.

### தெல்லிப்பழை லயன்ஸ் கழகம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் 80 - 81-ம் ஆண்டுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காகக் காங்கேசன் துறையில் நடந்த கூட்டமொன்றில் பின்வருவோர் புதிய உறுப்பினர்களாகத் தெரிவாகினர்

தலைவர் சி. எஸ். சுப்பிரமணியம் உபதலைவர் எம். எஸ். புஷ்பநாதன் கே. விநோதன் எஸ். ஸ்ரீதரன் செயலாளர் ஈ. ரி. அன்ரன் பாலசிங்கம் பொருளாளர் எம். ஸ்ரீதரன் பத்திராதிபர் எஸ் சண்முகலிங்கம்,

6 பேர் கொண்ட நெறியாளர் குழுவும் தெரிவானது. (அ)

## நாடும் நடப்பும்

சில தினங்களுக்கு முன் கொழும்புக்குச் சென்று திரும்பிய ஒரு செல்வமணி நமது ரயில் பிரயாணிகள் பற்றிக் கூறிய சுவையான தகவலை இங்கு தருகிறேன்,

"நான் யாழ்தேவியில் சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டேன் ரயிலில் சனக் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஒருவாறு ஒரு பெட்டிக்குள் புகுந்து கொண்டேன். என்னுடன் கன்னியாஸ்திரி மடத்தைச் சேர்ந்த சிஸ்டரும் சேர்ந்து கொண்டார். அந்தப் பெட்டியில் பல ஆண்கள் ஆசனங்களில் வசதியாக அமர்ந்திருந்தனர். கோனர் சீட் பிடித்துக் கொண்டவர்கள் வசதியாகச் சாய்ந்து இடையிடையே காலை வேளையிலேயே அரைத் தூக்கமும் போட்டனர்! சிலர் எங்களை வேடிக்கை பார்த்தும் ரசித்துக்கொண்டனர் நாங்களிருவரும் நின்ற நிலைதான். ஆசனங்களிலிருந்த ஆண்கள் தங்கள் காலை உணவையும் முடித்துக் கொண்டனர்.

மதவாச்சியை ரயில் தாண்டியபின் ஒரேயொரு இளைஞர் மட்டும் நாங்களும் உணவு உட்கொள்ள வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் சிறிது நேரம் தமது ஆசனத்தை எங்களுக்கு இரவலாகத் தந்து உதவினர்!. முதலில் அந்த ஆசனத்தில் அமர்ந்து உணவு உட்கொள்ளும்படி சிஸ்டருக்கு இடம்கொடுத்தேன் அதன்பின் அவர் பழையபடி நின்றுதவும் செய்யவும் நான் அமர்ந்து உணவு எடுத்தேன்! எனது சாப்பாடு முடிந்ததும் "இரவல் தந்தவர்" ஆசனத்தை மீண்டும் தனதாக்கிக் கொண்டார். என்றாலும் அவரது அந்த உதவிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டோம்.

நாங்கள் நின்ற இடத்துக்கு எதிரே 'குருமாருக்கு' என்று ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் வாட்டசாட்டமான ஆண்கள் வசதியாக அமர்ந்திருந்தனர். கன்னியாஸ்திரி சிஸ்டரும் குருமாருக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் இருக்கத் தகுதியில்லையா? என்ற கேள்வியை நான் எனக்குள்ளேயே கேட்டுக்கொண்டேன்.

இப்போது பௌத்த குருமார் வந்தால் என்றுஎனக்குள் நினைத்துக்கொண்ட சமயம் ரயில் அநுராதபுரம் ரயில் நிலையத்தில் நின்றது. பௌத்த குருமார் மூவர் சொல்லி வைத்தாற்போல் அந்தப் பெட்டிக்குள் ஏறினர். 'குருமாருக்கு' என்று எழுதப்பட்டிருந்த ஆசனத்தின் முன் வந்து அவர்கள் நின்றதுதான் தாமதம் 'கோணர்' சீட்டில் அரைத் தூக்கம் போட்டுக் கொண்டிருந்தவர் உட்பட மூவரும் விழுந்தடித்துக் கொண்டு எழுந்து பயபக்தியுடன் ஆசனத்தை அவர்களுக்கு விட்டுக் கொடுத்து ஒதுங்கி நின்றனர்.

நான் சிஸ்டரைப் பார்த்தேன் அவர் அப்போதும் அமைதியாகவே நின்றார்.

சீதனம் வாங்கி ஆட்சி உரிமை கொண்டாடிப் பழக்கப்பட்ட நமது மக்கள், ரயிலிலும் ஆசனங்கள் தமது பிரயாணம் முடியும் வரை தமக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்டுவிட்டதாகவே கருதுகிறார்கள் போலும்!

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டியில் புதையல் எடுக்க

# நரபலி கொடுக்க முயற்சி?

## இருபெண்கள் உட்பட ஐவர்மீது விசாரணை

(மாவிட்டபுரம்)

புதையல் எடுப்பதற்காகக் கடந்த 6 மாதங்களாக மடைகள் பரப்பி மந்திரங்கள் ஓதி ஆடு, கோழிகள் வெட்டி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனளிக்காமல்போகவே இறுதியாக நரபலி கொடுக்க முயற்சிக்கப்பட்டதாம். தகவல் அறிந்து தக்க சமயத்தில் அங்கு விரைந்த காங்கேசன்துறைப் பொலிசார் அதனைத் தடுத்து நிறுத்தி இதில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் ஐந்துபேரை விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். இதில் இருவர் பெண்களாவர்.

இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இச்சம்பவம் மயிலிட்டி வடக்கு வைரவர் கோவிலடியில் இடம்பெற்றது.

அவ்விடத்தைச் சேர்ந்த (வேலுப்பிள்ளை இராஜா) என்பவரது வீட்டு வளவினுள் கிடந்த ஒரு தோண்டப்பட்டசமயம் அந்தக் கிடங்கில் சுமார் 5 அடி ஆழத்திலேயே தண்ணீர் ஊற்றுத் தென்பட்டதையடுத்து அவ்விடத்தில் ஏதோ விசேஷம் இருப்பதாகக் கருதிய வீட்டுக்காரர் மந்திரவாதிகளை நாடினராம்.

இங்குள்ள மந்திரவாதிகள் மட்டுமன்றி மட்டக்களப்பிலிருந்தும்கூட மந்திரவாதிகள் வரவழைக்கப்பட்டபோது அவர்கள் இவ்விடத்தில் புதையல் இருப்பதாகக் கூறி அதனை எடுக்க மடைகள் பரப்பி மந்திரம் ஓதி பலிகள் கொடுக்கப்படவேண்டுமெனக் கூறினராம்.

இதற்கிணங்க இதுவரை பல ஆயிரம் ரூபா செலவு செய்து மடைகள் பரப்பி ஆடு, கோழிகள் வெட்டி தினமும் நள்ளிரவு 12 மணிக்கு மேல் பூசைகள் நடத்தியும் பயன் எதுவும் கிடைக்கவில்லையாம்.

கடந்த ஆறு மாதங்களாக நடைபெற்றுவந்ததாகக் கூறப்படும் இம்முயற்சி தோல்வியில் முடியவே நரபலி கொடுப்பதால்தான் புதையல் வெளிப்படுமென மந்திரவாதி ஒருவர் கூறினாராம். அதற்கிணங்க அவ்வீட்டுக்காரரின் மகளான 18 வயதுடைய அழகிய இளம் யுவதியை நரபலி கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டதாம்.

இதுபற்றி ஊர் மக்கள் காங்கேசன்துறைப் பொலிசாருக்கு இரகசியத் தகவல் கொடுத்ததன்பேரில் அவ்விடத்திற்கு விரைந்த காங்கேசன்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. மேவின் பெரேரா, குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி திரு. ஆர். ஜி. பீரிஸ், சார்ஜன்ட் தியாகராசா ஆகியோர் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி நள்ளிரவு 12 மணியளவில் பிரஸ்தாப இடத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டனர்.

அச்சமயம் மேற்படி மடையை ஒழுங்குபடுத்தி விட்டு அருகிலுள்ள காளி கோவிலுக்கு வழிபாட்டுக்காகச் சென்றிருந்தவர்கள் திரும்பி வரும்போது பொலிசார் அவர்களைக் கண்டபோதிலும் பொலிசாரைக் கண்ட சந்தேக நபர்கள் காட்டினுள் ஓடித் தப்பிவிட்டனர்.

இதை அடுத்து வீட்டுக்காரரின் மனைவியான தங்கரத்தினம் என்பவரையும் மகளையும் பொலிசார் கைது செய்ததுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த சப்பாணிகளைப் எடுத்து ஊற்றி மடைகளையும் அழித்து விட்டுச் சென்றனர்.

பின்னர் வீட்டுக்காரரும் இதில் சம்பந்தப்பட்ட சி. நாகராசா, எஸ். முருகன் ஆகிய இருவரும் பொலிசில் சரண் புகுந்தனர்.

விசாரணையில் நரபலி கொடுக்கத் தாம் முனையவில்லையென அவர்கள் தெரிவித்தனர். பொலிசார் விசாரணையின்பின் இவர்களை எச்சரித்து விடுதலை செய்து இனிமேல் இப்படியான மூடநம்பிக்கையால் விஷமச் செயல்களில் ஈடுபடக்கூடாதெனவும் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரித்தனர். (அ)

### யாருடையவை?

யாழ் ஸ்ரான்லி வீதியில் நீராவியடியைச் சேர்ந்த தெய்வேந்திரம் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட திறப்புக்கோர்வை ஒன்றும் முத்திரைச் சந்தைச் சந்தியில் கண்டெடுக்கப்பட்ட மோட்டார் சாரதி லைசென்ஸ் ஒன்றும் "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும் (க)

"பாராளுமன்றம் சென்ற பின்னரே

## கூட்டணித்தலைவர்கள் மாற்றான் பலம்பற்றி சிந்திக்கிறார்கள்"

(கொண்டாவில்)

"தமிழ் ஈழ ஆணையை தமிழ் மக்கள் தாமாகச் சென்று தலைவர்களிடம் கொடுக்கவில்லை. தலைவர்கள் தேர்தல் காலத்தில் கேட்டார்கள். அதற்கு தமிழ் மக்கள் அங்கீகாரம் வழங்கினார்கள். தேர்தல் காலத்தில் இவர்கள் மாற்றான் படை பலம் கொண்டது என்பதை சிந்தியாது விட்டுவிட்டு பாராளுமன்றம் சென்றபின்னர் மாற்றான் படையைப் பற்றிச் சிந்திக்கின்றார்கள். இளைஞர்கள் தட்டிக் கேட்டால் மாற்றான் படைப்பலம் அறிந்தே நாம் எதையும் செய்ய வேண்டும் என்று கூறுவதுடன் இளைஞர்களையும் பயமுறுத்துகின்றார்கள். தலைவர்கள் உணர்ச்சிகளை ஊட்டினார்கள். பின்னர் அவர்களே அவற்றை அழிப்பதற்கும் முன்நிற்கின்றனர். இந்நிலை இருக்கக்கூடாது."

மேற்கண்டவாறு தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர் திரு. கோவை மகேசன் குறிப்பிட்டார். கொக்குவில் சந்திக்கு அருகாமையில் ஸ்கூல் ஒப் எக்கனமிக்ஸில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு திரு. இ. திருநாவுக்கரசு தலைமை தாங்கினார்.

திரு. மகேசன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

சுதந்திரப் பாதையில் விழு நடைபோடும் பொழுது எச்சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றம் தடைக்கல்லாக இருக்க மாட்டாது. தமிழ் ஈழத்தை அமைக்க ஆணை கிடைத்துவிட்டது. அதில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளோம் என்பதை தட்டிக் கேட்கின்றோம். தமிழ்இன வரலாற்றிலேயே ஐக்கிய தேசியக் கட்சியினர் ஆட்சிக்காலத்தில் எமது போராட்டங்கள் பின்தள்ளப்படும் நிலைகாணப்படுகின்றது. இது சரித்திரரீதியான உண்மையாகும்.

### கொள்கை தவறிவிட்டனர்

இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது கொள்கையில் இருந்து தவறியுள்ளனர். இதனையே நாம் மக்கள் மத்தியில் எடுத்துக்கூறுகின்றோம். நாம் பிரச்சினையை வளர்க்க விரும்பியோ அன்றி புதிய கட்சி அமைப்பதற்காகவோ தேர்தலுக்காகவோ இதனைக் கூறவில்லை. நாம் கூட்டணியை சரியாக இயங்கும்படி தான் கேட்டுக்கொள்கின்றோம்.

1948ம் ஆண்டு திரு. டி. எஸ். சேனநாயக்க காலத்தில் காங்கிரஸ் கட்சிபிரிந்து தமிழரசுக் கட்சி உருவாகியது. 1967 ல் திரு. டட்லி சேனநாயக்கா காலத்தில் தமிழரசுக் கட்சி பிரிந்து சுயாட்சிக்கழகம் உருவாகியது. இன்று ஜே. ஆர். காலத்தில் அரசு தமிழ்மக்கள் மத்தியில் பிரச்சினையை உருவாக்குகின்றது.

அமரர் தந்தை செல்வா, அமரர்கள் வன்னியசிங்கம், நாகநாதன்போன்றபலதலைவர்களை உருவாக்கினார் திரு அமிர்தலிங்கம் அவர்களும் தனது திறமையான தொழிற்பாடுகள் மூலம் சிறந்த ஒரு தலைவரானார். செல்வா எச்சந்தர்ப்பத்திலும் தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று கூறியதில்லை. 1970 க்கும் 1977 க்கும் இடையில் பாராளுமன்றத்திற்கு வெளியில் திருவாளர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், ஆகியோர் இருந்தபொழுது எவ்வளவு உற்சாகமாகத் தொழிற்பட்டார்கள் இவர்கள் பாராளுமன்றம் சென்றதும் அந்நிலையில் இருந்து மாறிவிட்டார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் மக்களின் தலைவர்களாக இருக்கவேண்டும் என்பதையே எம்மால் தாங்கமுடியாது

பாராளுமன்றத்திற்கு எம் இனத்தைக் காட்டிக்கொடுக்கும் துரோகிகள் செல்லக்கூடாது என்பதற்கே நீங்கள் சென்றீர்கள். திருவாளர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோர் பாராளுமன்றத்திற்கு வெளியே நின்று நடுநிலைப் பாதையில் எம்மை அழைத்துச் செல்லவேண்டும். நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்து எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவும் செய்து உங்கள் அரங்கில் தமிழ் பிரச்சினையை ஒப்படைச்செய்து விட்டீர்கள். இனி எதிர்க்கட்சித் தலைவராக இருந்து சாதிப்பதற்கு எதுவும் இல்லை.

எமது பட்டம் பதவி எதுவும் தேவை இல்லை முன்னர் தமிழ் இனம் இல்லை பாரம்பரிய பிரதேசம் இல்லையென்று குறிப்பிட்டவர் இன்று இன விகிதாசாரம் பற்றியும் மாவட்ட சபைகள் பற்றியும் ஜே. ஆர். குறிப்பிடும் அவற்றைப்பற்றி மேடையில் பேசுகிறார்கள். ஜே ஆரின் இன்றைய ஒரே நோக்கம் திருகோணமலையை சிங்களமயப்படுத்தலே ஆகும். நாம் திருகோணமலையை இழந்தால் தமிழ் ஈழம் அமைப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. ஜே. ஆர். பல வழிகளிலும் தமிழர்களைப் புறக்கணித்து அவர்களின் தாயகத்தையே பறிக்கும் வழிவகைகளையே செய்து வருகின்றார்.

1881 - க்கும் 1931 - க்கும் இடையில் திருகோணமலைப் பிரதேசத்தில் 4.2 வீத சிங்கள

(5-ம் பக்கம் பார்க்க)

பண்ணாகம் சங்கிலி கொள்ளைவழக்கு:

## "மோர்கேட்டு வந்தவாலிபர் என் சங்கிலியை அறுத்தார்"

(மாவிட்டபுரம்)

"என்னிடம் மோர் கேட்ட எதிரி மோர் எடுப்பதற்காக நான் அடுப்படிக்குள் சென்றபோது பின்தொடர்ந்து வந்து என்னை தள்ளிவிழுத்தி நெஞ்சில் காலால் உதைத்துக்கொண்டு எனது கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடினார்"

மல்லாகம் நீதிமன்றத்தில் நடந்த பண்ணாகம் சங்கிலி கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த சி. சிவக்கொழுந்து கூறினார்.

பண்ணாகத்தில் வீட்டில் தனித்திருந்த இப் பெண்மணியிடமிருந்து 6000 ரூபா பெறுமதியான 3 1/2 பவுண் தங்கச்சங்கிலியை கொள்ளையடித்ததாக பண்ணாகத்தைச் சேர்ந்த என். சூரியகாந்தன் என்பவர் மீது இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சிவக்கொழுந்து மேலும் தமது சாட்சியத்தில் கூறியதாவது: எனது கணவர் இறந்துவிட்டார். பிள்ளைகள் வெளிநாட்டில் இருக்கின்றனர். நான் வீட்டில் தனியே தான் இருப்பேன். எதிரியை முன்பே எனக்குத் தெரியும். அவர் என்னிடம் மோர் வாங்க வருவார். சம்பவதினமும் வந்து மோர்வாங்கிச் சென்ற எதிரி அரைமணி நேரத்தினுள் மீண்டும் வந்தார். மேலும் மோர் வேண்டுமென்று அவர் கேட்டார். நான் போத்தலை வாங்கிக்கொண்டு மோர் எடுப்பதற்காக அடுப்படிக்குள் போனபோது எதிரி என்னைப் பின்தொடர்ந்து வந்து என்னைத் தள்ளிவிழுத்தி நெஞ்சில் மிதித்துக்கொண்டு கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடினார். நான் கூக்குரலிட்டவே வெற்றிவடிவேல் என்பவர் முதலில் ஓடி வந்தார். அவரிடம் நடந்ததைக் கூறினேன். அவர் சைக்கிளில் சென்று பார்த்தபோதும் எதிரியைக் காணவில்லை என் சொன்னார்.

எதிர்சார்பில் ஆஜரான சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு சாட்சியை குறுக்குவிசாரணை செய்தார்.

அடுத்து பண்டத்தரிப்பில் நகைக்கடை வைத்திருக்கும் க. அநளானந்தம் என்பவர் சாட்சியமளிக்கையில் எதிரி பதக்கம் ஒன்றை தம்மிடம் தந்து மோதிரம் ஒன்று அதில் செய்து தருமாறு கேட்டதாகவும், தாம், திகதி, பொருள், அவரது பெயர் என்பவற்றை பதிந்தபின் 700 ரூபா பணம் கொடுத்ததாகவும் கூறினார்.

மேல் விசாரணை இம்மாதம் 28ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி ஆர் ஜே. செல்வரத்தினமும் எதிரிதரப்பில் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசும் ஆஜரானார்கள். (க)

யாழ். றோட்டறிக் கழகம்

வருகிற யூன் மாதம் (கடைசிப் பகுதியில்)

மனையியல் - தையற்கலை

ஆகியவற்றில் ஒரு பொருட்காட்சியை ஏற்படுத்தவுள்ளது

பாடசாலை மாணவர்களும், தனியார் கல்வி நிறுவனங்களும், மற்றையோரும் இதில் பங்கெடுக்கலாம். இதில் பார்வைக்கு வைக்கப்படும் சிறந்த பொருட்களுக்கு கவர்ச்சியான பரிசுகள் கொடுக்கப்படும் பங்கெடுக்க விரும்புவோர் இம்மாதம் இருபதாம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

றெட்டேறியன்
டாக்டர் பா. சோ. பாரதி,
தலைவர் - தொழிற்சேவைப் பகுதி
568, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

5767

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மந்திரிப்பதவி கிடைத்ததும் ஏழைமக்களை மறக்கவில்லை'

## மன்னாரில் பதில் சுகாதார அமைச்சர்

(மன்னார்)

இந்த வைத்திய சாலையில் உள்ள குறைகளை நேரில் கண்டு வைத்தியசாலையின் தேவைகளை நிறைவேற்றவே இங்கு வந்துள்ளேன். இந்த வைத்தியசாலையில் பல குறைகள் இருப்பதாக நலன் நோக்குச் சங்கத்தினரும் அதிகாரிகளும் இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களும் எடுத்துக் கூறினார்கள்

மன்னார் ஆதார வைத்திய சாலையில் மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரி திரு ஆர். குமரப்பாபிள்ளை தலைமையில் நடைபெற்ற வைத்திய தின விழாவில் பதில் சுகாதார அமைச்சர் திரு பி. ரேமரட்ண குணசேகரா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழாவில் முதூர் எம். பியும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப் மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ மன்னார் எம் பி. பி எஸ். சூசைதாசன் வைத்தியசாலைக்குழு தலைவர் மன்னார் நலன் நோக்குச் சங்கத்தின் தலைவர் பதில் சுகாதார அமைச்சின் செயலாளர் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. ஆர். விஜயசிங்கா ஆகியோர் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அமைச்சர் தொடர்ந்து தமது உரையில் கூறியதாவது உங்களது எம். பி. சொன்னார் இங்கு வரும் மந்திரிமார்கள் எல்லாம் இங்கு வந்தவுடன் வாக்குறுதி கொடுத்து விட்டு கொழும்புக்குப் போனவுடன் மறந்து விடுகிறார்கள் என்று அப்படி நான் வாக்குறுதி கொடுக்க வில்லை என்னால் முடிந்ததை இந்த வைத்திய சாலைக்குச் செய்து தருவேன்

இன்று எனக்குச் சுபதினமாகும் இந்த வைபவத்தில் நான் கலந்து கொள்வதை விட்டு மிகவும் சந்தோசமடைந்துள்ளேன் நான் ஆனைமடுவ இடைத்தேர்தலின் பங்கு பற்றி உடைகளைச் செய்து கொண்டிருக்கும் போது இந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

அந்த அழைப்பை மிகவும் இந்தோஷத்தோடு ஏற்று சந்தித்து வந்துள்ளேன்.

நானும் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் நான் கஷ்டத்தில் தான் வளர்ந்தேன் மந்திரிப்பதவி கிடைத்ததும் ஏழைகளின் கஷ்டங்களை மறக்கவில்லை. நானும் ஏழையாக இருந்ததால் ஏழைகளின் கஷ்டமும் எனக்கு நன்கு தெரியும் சாதாரண ஏழைக்குடும்பத்தில் பிறந்த நான் உயர்வதற்கு உதவி புரிந்தவர் நமது ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவாகும் எனக்கு கிடைத்த எம். பி பதவியையும் பதில் சுகாதார மந்திரிப் பதவியையும் எனது கிரீடமாகக் கருதவில்லை ஏனையோரைப் போல் பசி பட்டினி எல்லோருக்கும் உண்டு நோயும் அப்படித்தான் மற்றவர்களுக்கு நோயின் வேதனை எப்படி யிருக்குமோ அப்படியே எனக்கும் நோயின் வேதனை இருக்கும் எனது பதவியைக் கொண்டு ஏழைகளின் துயரைத் துடைப்பேன் எந்த இலமாகுலும்சரி பிரச்சினைகள் ஒரேமாதிரியே தீர்த்து வைக்கப்படும் இந்த வைத்திய சாலையின் தேவைகள் மதிப்பீடு செய்தபின் என்னால் முடிந்தவற்றை இன்னும் சில மாதங்களில் செய்து தருவேன்

பிரத்தியேக ஸ்தாபனம் மூலம் வைத்தியம் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம். பிரத்தியேக ஸ்தாபனம் மூலம் வைத்தியம் செய்தால் நாட்டில் உள்ளகுறை தீரும். பிரத்தியேக ஸ்தாபன வைத்திய சாலைக்கு நிதி திரட்ட யோசித்துள்ளோம் இது பற்றிய மசோதா ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இப்படி ஒரு நிதி ஒதுக்கப்பட்டால் வைத்திய சாலைகளின் தேவைகள் குறைந்து விடும்

இங்குள்ள ஊழியர்களும் உத்தியோகஸ்தர்களும் பொதுமக்களும் ஒன்றிணைந்து வைத்திய சாலையின் முன் பக்க மதிலை சிரமதானம் மூலம் நிறைவேற்றினீர்கள் இது பாராட்டத்தக்கது. இலங்கைக்கும் இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

### 1500 தாதிமாருக்கு பயிற்சி

இந்த வைத்தியசாலையில் உள்ள முதலாவது குறை தாதிமார் பற்றாக்குறையாகும் கடந்த வருடம் 300 தாதிமார் உழைப்பதற்காக வெளிநாடு சென்றுவிட்டார்கள். இந்தக் குறையை சமாளிக்க இந்தவருடம் 1500 தாதிமாருக்குபயிற்சியளிக்க ஏற்பாடு செய்துவருகிறோம் முன்பு வருடமொன்றுக்கு 600 தாதிமாரே பயிற்றப்பட்டனர். இந்த வருட முடிவிற்குள் மன்னார் வைத்தியசாலையின் தாதிமார் பற்றாக்குறை நீக்கப்படும். பிரதம தாதிமார் எல்லோரும் கொழும்பிலேயே வேலைசெய்ய விரும்புகிறார்கள். அனேகமான பிரதம தாதிமாரின் கணவர்மார் கொழும்பில் கடமையாற்றுவதால் அவர்களும் கொழும்பில் கடமையாற்ற விரும்புகிறார்கள். ஆதலால் கொழும்பிலுள்ள பிரதம தாதிமார் இனிமேல் மன்னாரில் திருமணம் செய்து மன்னாரிலேயே குடியேறவேண்டும். அப்படிச் செய்தால்தான் மன்னார் வைத்தியசாலையின் பிரதம தாதிமார் பற்றாக்குறை தீரும்.

### எங்கும் குறைகள் உண்டு

மன்னாரில் மட்டுமல்ல இலங்கையிலும் இப்படியான குறைகள் உண்டு- அப்படியான குறைகள் இருந்தும் வைத்தியசாலை ஊழியர்கள் மிகவும் சிறப்பான முறையில் சேவைசெய்து தம்மைத் தாமே தியாகம் செய்கிறார்கள் பலர் இச் சேவையைத் தெய்வச்சேவையென கருதி கடமையாற்றுகிறார்கள். ஒரு சிலர் மருந்து களவெடுப்பதையும் நோயாளிகளுக்குகொடுக்க வேண்டிய உணவுப்பொருட்களை மூட்டையாகக் கட்டி வீட்டிற்குக் கொண்டுசெல்பவர்களையும் கண்டிருக்கிறேன். அப்படிச் செய்யக்கூடாது. நாம் எல்லோரும் மரணமடைவது இயற்கை. சுகாதார சேவை ஊழியர்கள் மட்டுமல்ல சகல துறைகளிலுமுள்ள ஊழியர்களும் தமது சேவையைத் தெய்வச்சேவையாகக் கருதி செயற்படவேண்டும். [ச]

---

## இன்றைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் ரஸிக ரஞ்சன சபாவின் 29வது ஆண்டு இசை விழாவின் 6ம் நாளான இன்று புதன்கிழமை நிகழ்ச்சிகள் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் நிகழும். நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:

மாலை 6 30—7-30 மணிவரை செல்வி ஏ. சம்பந்தராணி பாட்டு: திரு கே. சித்திவிநாயகம் வயலின்: திரு. வி அம்பலவாணர் மிருதங்கம் 8 - 30 —8-45 மணி வரை தலைமையுரை 8-1 —10-15 மணிவரை திருமதி சரஸ்வதி பாக்கியராசா பாட்டு செல்வி தவதேவி கப்பையா, வயலின் திரு எஸ். மகேந்திரன் மிருதங்கம்.

(கொ.அ)

---

## ஆசிரியர் பிரச்னையை அறிய புதிய நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

"ஆசிரியர்களைப் பாதிக்கும் விஷயங்களை அறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதற்காக இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் புதிய நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது. ஆசிரியர்களை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகளையும் ஆராய்வதற்காக ஆசிரியர்கள், சமூகத் தலைமைப் பீடம், வட்டார வித்தியாதரிசிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட கருத்தரங்குகளை அமைத்து நடத்தி அவற்றின் மூலம் ஆசிரியர்களது பிரச்னைகளையறிந்து அவற்றைத் தீர்த்து வைக்க மேற்படி சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது".

இத்திட்டத்தின் மூலம் கல்வி வட்டாரங்கள் தோறும் ஒரு தடவைக்கு ஒருகருத்தரங்கு வீதம் நடத்த சங்கம் திட்டமிட்டுள்ளதாக சங்க யாழ். பாவட்ட பிரசார செயலாளர் திரு. கனக மகேந்திரா தெரிவித்தார். (அ)

---

## கூட்டணி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களே வாழ்ந்தார்கள். ஆனால் 1931—1971க்கும் இடை 28·8% சிங்கள மக்கள் குடியேறியுள்ளார்கள். ஜே ஆரின் திட்டப்படி அடுத்த மூன்று காலத்தில் திருகோணமலை மற்றுமே விழுங்கப் பட்டுவிடும். நாம் ஒரே குடும்பம் என்ற நிலையைத் தான் அவர்கள் விடும் பிழையைத் தட்டிக் கேட்கின்றோம். இதன் காரணமாக எம்மை வெளியே (சல் என்ற நிலைதான் உருவாகின்றது. இதனால்தான் நாம் எமது நிலையை வெளியில் சொல்ல வேண்டி ஏற்படுகிறது.''

பற்றும் இளைஞர் பேரவை நிர்வாகச் செயலாளர் திரு. இளநகுமாரன், திருவாளர்கள் இராசரத்தினம், செந்தூர்ராசா, தங்கவேலாயும், செந்தில்ராசா, சந்திரபாலன் ஆகியோரும் பேசினர். (இ)

---


# லங்கெம்

## பொருட்களை உபயோகிப்போருக்கு எச்சரிக்கை

எமது விவசாய ரசாயனப் பொருட்களின் சில பிரபல்யமான பெயர்களை ஏமாற்றுக்காரர்கள் சிலர் தமது போலிப் பொருட்களை சந்தைப்படுத்த பயன் படுத்துகிறார்கள் என எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. பின் வருவனவற்றை வைத்து எமது பொருட்களை இலகுவாக கண்டுகொள்ளலாமெனப் பொதுமக்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

1. ஆர்ஓபிபி மூடி — பூச்சி நாசினிகளுக்கு சிவப்புமூடி, களை கொல்லிகளுக்கு மண் நிற மூடி. கீழே காண்பிக்கப்பட்டுள்ள லங்கெம் அடையாளத்துடன்

LANKEM

2. லங்கெம் லேபல்களின் தனிப்பட்ட வடிவம்.

3. லங்கெம் லேபலிலுள்ள தொடர் இலக்கம்.

எமது பெயர்களை சட்டவிரோதமாக, அனுமதியின்றி உபயோகிப்பதற்கு காரணமாகவுள்ளவர்களை கைதுசெய்வதற்கு உதவியான தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## லங்கெம் சிலோன் லிமிட்டெட்

760, 762, பேஸ்லைன் ரோட்,

கொழும்பு 9. தொலைபேசி: 98292 - 96.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிபீடமேறும் நோக்குடன் தி. மு. க.- இ. காங். கூட்டணி அமைக்கப்படவில்லை

## சென்னை 'மரீனுபீச்' கூட்டத்தில் இந்திரா பேச்சு

சென்னை, மே 13

ஆட்சிக்குவரும் நோக்குடன் தி மு க — இந்திராகாங்கிரஸ் கூட்டணி அமைக்கப்பட வில்லை. ஏழை எளிய மக்களின் வாழ்வை வளமாக்கும் பொருட்டே இக் கூட்டணி உருவாக்கப்பட்டது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

சென்னை மரீனு கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

3 ஆண்டுகளாக சீர்கெட்டுக் கிடந்த இந்தியாவை 3 மாத கால ஆட்சியில் எம்மால் சீரான பாதையில் அழைத்துச் செல்லமுடிந்துள்ளது.

கடந்தகால ஆட்சியாளர்கள் எந்தத் திசையில் இந்தியாவைக் கொண்டுசென்றார்கள் என்பது எவருக்குமே தெரியாது.

மூன்று ஆண்டுகாலத் தவறுகளைத் திருத்த 3 மாதங்கள் எவ்வாறு போதும்?

3 ஆண்டு ஆட்சியில் சட்டமும் ஒழுங்கும் சீர்கெட்டுக் கிடந்தன. சாதிப்பூசல்களும் இனக்கலவரங்களும் மலிந்து கிடந்தன. இவற்றையெல்லாம் உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எம்மிடம் மந்திரசக்தி எதுவும் கிடையாது. கடும் உழைப்பின் மூலமே இச் சீர்கேடுகளையெல்லாம் நிவர்த்திசெய்யமுடியும்.

எமது வெளிநாட்டுக் கொள்கை காரணமாக இந்தியாவின் மரியாதையும் கௌரவமும் சர்வதேசரீதியில் அதிகரித்துள்ளது. (இ)

தி. மு. க. - இ. காங். கூட்டணி

## எச்சூழலிலும் சிதருது; இந்திரா முன்னிலையில் கருணநிதி உறுதி

சென்னை, மே. 13

"தி மு க - இந்திரா காங்கிரஸ் கூட்டணியை என்றுமே எவருமே எந்தச் சூழ்நிலையிலும் உடைக்க முடியாது. எமது கூட்டணி ஆட்சிபீடம் ஏறினுல் தொடர்ந்து நிலையான ஆட்சி நடத்தும் என்று உறுதியாகக் கூறுகிறேன்"

இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு மு. கருணநிதி மரீனுவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

எமது கூட்டணி என்றுமே நிலைக்காதுஎன்று திரு. எம். ஜி. இராமச்சந்திரனும், அ. தி. மு. க.வினரும் கூறிவருகின்றனர். அவர்களது கூற்றை சில சமயங்களில் எமது கூட்டணி நிலைக்கும் என்பதை உறுதி செய்வதாகவே அமைந்துவிடுகிறது.

அவர்கள் வீணுகக் கனவு காண்கிறார்கள். எதிர்வரும் தேர்தலில் பாவம் அவர்கள் ஏமாறப்போகிருர்கள் என்றும் திரு. கருணநிதி கூறினர்.

எதிர்வரும் தேர்தலில் சென்னை நகரில் இக்கூட்டணி சார்பில் போட்டியிடும் அபேட்சகர்களை திருமதி காந்தி அறிமுகம் செய்துவைத்தார்.

மத்திய அமைச்சர்களான திருவாளர்கள் ஆர் வெங்கட்ராமன், ஆர் வி. சுவாமிநாதன், அன்பழகன், இளைய பெருமாள், கருப்பையா மூப்பனர், நடிகர் சிவாஜி கணேசன் உட்பட பலர் உரையாற்றினர். (இ)

## வாஜ்பாயின் குற்றச்சாட்டு குறித்து இந்திரா கேள்வி

சென்னை, மே 13

"இந்திராவின் ஆட்சியில் மீண்டும் அவசரகாலநிலை அமுல்செய்யப்படும் என்று பாரதிய ஜனதா கட்சித் தலைவர் திரு. அட்டல் பிகாரி வாஜ்பாய் கூறியுள்ளார். எந்த அடிப்படையில் அவர் அவ்வாறு கூறினரோ எனக்குத் தெரியாது.

இப்படிக் கேட்டார் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி.

சென்னை ராஜ்பவனத்தில் தம்மைச் சந்தித்த ஆதரவாளர்களிடையே பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. வாஜ்பாய் என்மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார். அவற்றில் ஒன்றையாவது அவரால் நிருபிக்கமுடியுமா என்றும் திருமதி காந்தி கேட்டார். (இ)

## ஆப்கனில் 96 ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது வழக்கு

காபூல், மே 13

ஆப்கானிஸ்தானில் கடந்த மாத இறுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது கைதுசெய்யப்பட்ட 96 பேர் மீது ஆப்கானிஸ்தானின் ரஷ்ய ஆதரவு அரசு வழக்குத் தொடர்ந்துள்ளது.

அரசுக்கு எதிரான இந்த ஆர்ப்பாட்டத்தின்போது 60 பேர் பலியானதும் 600 பேர் கைதுசெய்யப்பட்டதும் தெரிந்ததே. [ஆ]

## 25 அமெரிக்கர்கள் நாடு கடத்தல்

தரிப்பொலி, மே 13

லிபியாவிலிருந்து 25 அமெரிக்கர்கள் வெளியேற்றப் பட்டுள்ளனர்.

லிபியாவில் கிளர்ச்சிக்காரர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்கள் நாடு கடத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டது (ஆ)

## கோஷ்டி மோதல்: 14 ஹரிஜனர்களும் மற்றும் ஒருவரும் பலி!

புதுடில்லி, மே 13

உத்தரப்பிரதேசத்தில் இரு சமூகங்களைச் சேர்ந்த குழுவினரிடையே ஏற்பட்ட மோதலில் 14 ஹரிஜனர்களும் ஒரு ஜாதி இந்துவும் பலியானர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)




சேர்கோப்பூர்

36% (3, 4, டீ. பீ. ஏ. கொண்டது)

சேர்கோப்பூர் 36% (பட்ட மாத்திரத்திலேயே) சேறுன அல்லது உலர்ந்த நெல் வயலில் உள்ள நெற்சப்பி, கோழிச்சூடன், குதிரைவாற்புல், இடைச்சி, கோரை, மொண்டி ஆகிய சகல களைகளையும் கட்டுப்படுத்தும் வன்மையான களைநாசினி. உச்சப் பயன் பெற, விதைத்து 7-21 நாட்களுள் சேர்கோப்பூர் தெளிக்க வேண்டும். களைகள் 2-3 இலை விட்டிருக்கும் காலத்தில் பாவிப்பதே மிகச் சிறந்தது. சேர்கோப்பூர் 36% பாவித்து நெற்களைகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலைக்கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான BAYER பாயர் பீடைநாசினிகளின் முதல்வர்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 95568, 96381-4.

450 மில்லி லீட்டர் ரூபா 33-50
3 25 லீட்டர்கள் ரூபா 220-00

## உகண்டாவின் அதிகாரம் ஜனதிபதி பினைஸாவிடம் வீட்டுக்காவலில் வைத்துள்ளதாக இராணுவம் கூறுகிறது

கம்பாலா, மே 13

உகண்டாவின் ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியுள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளபோதிலும் சகல அதிகாரங்களும் தொடர்ந்தும் தமது கைகளிலேயே உள்ளதாக ஜனதிபதி திரு. கொட்பிரே பினைஸா தெரிவித்துள்ளார்.

தற்போது எண்டபே நகரிலுள்ள தமது இல்லத்திலிருக்கும் ஜனதிபதி திரு. பினைஸா தமது அதிகாரங்களைக் கைவிடவில்லையென்று அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் உகண்டா வானெலிநிலையம் உட்பட தலைநகர் கம்பாலா முழுவதும் இராணுவத்தினர் தற்போது கைப்பற்றியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனதிபதி திரு. பினைஸா அவரது இல்லத்தில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் இராணுவ பீடம் அறிவித்துள்ளது. (இ)

## ஈரானில் புதிய பிரதமர் தெரிவு முயற்சி தோல்வி

தெஹ்ரான், மே 13

ஈரானில் புதிதாகப் பிரதமர் ஒருவரைத் தெரிவுசெய்ய ஜனப் பாதிபதி பானிசதார் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

ஆளும் புரட்சிமன்ற உறுப்பினர்களிடையே எழுந்துள்ள அபிப்பிராயபேதம் காரணமாகவே இந்த முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

புதிய பாராளுமன்றம் கூடியபின்னரே புதிய பிரதமரைத் தெரிவுசெய்வதென்று புரட்சிமன்றம் தீர்மானித்துள்ளது.

புதிய பிரதமர் ஒருவரைத் தெரிவுசெய்ய விரும்பிய ஜனப் சதார் அதற்கு புரட்சித் தலைவர் ஆயத்தொல்லா கொமெய்னியின் இணக்கத்தையும் பெற்றிருந்தார். (இ)

## எகிப்தில் அரசியல் நெருக்கடி: பிரதமர் ராஜிஞமா!

கெய்ரோ, மே 13

எகிப்திய பிரதமர் டாக்டர் முஸ்தபா கலீல் தலைமையிலான அமைச்சரவை நேற்று ராஜிஞமாச் செய்தது.

எகிப்திய அதிபர் ஜனப் அன்வர் சதாத்திடம் டாக்டர் கலீல் தமது அமைச்சரவையின் ராஜிஞமாக் கடிதத்தை நேற்று சமர்ப்பித்தார்.

எகிப்தின் புதிய பொருளாதார அரசியல் கொள்கை ஒன்றை ஜனதிபதி ஜனப் சதாத் தயாரித்ததை அடுத்து ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகவே பிரதமர் தமது பதவியை ராஜிஞமாச் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாளை புதன்கிழமை ஜனப் சதாத் புதிய பொருளாதார அரசியல்கொள்கைகளையும் புதிய அமைச்சரவையின் பெயர்களையும் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## கம்பராமாயணக் காட்சிகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாந்திகதி முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தினர் இலக்கிய கலாநிதி பண்டித

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சுந்தராம்பாள் நடித்த
**ஒளவையார்**
(புதிய பிரதி)


கம்பராமாயண...

(3-ம்பக்கத்தொடர்ச்சி)

மணி சி. கணபதிப்பிள்ளையின் "கம்பராமாயணக் காட்சிகள்" என்ற நூலை யாழ். மாநகரசபைமண்டபத்தில் வெளியிட ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.


**ஹரன்** சாவகச்சேரி
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—பிரமிளா
**அன்புச் சகோதரர்கள்**
(புதிய பிரதி)

**[illegible]** (சுன்னாகம்)
தினசரி 6-40, 9-45
சனி ஞாயிறு 2-45
சிவாஜி—விஜயா
**பாலாடை**
(புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
[illegible]
**ரத்தத்தின் ரத்தமே**
(வண்ணக்கலர்)
[illegible] ஜோ தேன் [illegible]

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
விஜயா
நாகேஷ்
**திருடன்**
(புதிய பிரதி)

**SANTHI** JAFFNA Phone 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
ROY SCHEIDER (THE SEVEN UPS)...
DUSTIN HOFFMAN......in
**'MARATHON MAN'**
—A THRILLER — COLOR—
Next Attraction **"Sharks' Treasure"**
(color)

வெற்றிகரமான 8 வது வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தொலைபேசி: 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி: [illegible]
[illegible]-ராதிகா-விஜயன்-ரதி
[illegible] நடித்த
**நிறம் மாறாத பூக்கள்**
(வண்ணவிசுடம்)

**[illegible]** ([illegible])
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
எஸ். எஸ். ஆர் - விஜயகுமாரி
நடித்த
**குமுதம்**

**[illegible]** ([illegible]) போன் 7896
தினசரி 4 காட்சிகள்
**மரகதம்** (புதிய பிரதி)

GRAND RELEASE
**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Daily at 10-30, 2-30, 4-45, 7-15 & 9-45
**BLESS THIS HOUSE**
(Color)

**ராணி** (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-15, 7-00, & 9-45
இந்தியாவில் தொடர்ந்து 200 நாட்கள் ஓடி
வெள்ளிவிழா சாதனை ஏற்படுத்தியது
✶ கமலஹாசன் (இருவேடங்களில்)
✶ ஸ்ரீதேவி மற்றும்பலர் நடித்த
**கல்யாண ராமன்** (கலர்)
தொடர்ந்து கொட்டகை நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுவதால், [illegible]


## நிதி உதவி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்து இளைஞர் இயக்கத்தின் புதிய கட்டிட நிதிக்கு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி திரு. தா திருநாவுக்கரசு 1000ரூபா அன்பளிப்புச் செய்துள்ளார்.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 1-ந்திகதி

(14-5-80) புதன் கிழமை

மேடம்: மனப்போராட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம். இதன்மூலம் கைகலப்பும் ஏற்படலாம் பிள்ளையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். பொறுமை நன்று.

இடபம்: மேடைப்பேச்சாளர்களும் நடிகர்களும் பெரும் புகழ்அடைவார்கள் பொருள் வரவுக்கும் இடமுண்டு. இல்லத்தில் திருப்திகரமான நிலை தென்படும். அந்தஸ்திலும் முன்னேற்றம் உண்டு.

மிதுனம்: சிந்தனைகள் சிறப்பாயும். எதற்கெடுத்தாலும் ஆத்திரப்படுவீர்கள் மூத்த சகோதரத்தின் உடல் நிலை பாதிக்கப்படலாம் போட்டி விவகாரங்களில் இறங்காது பொறுமையுடன் இருக்கவும், துக்கதினம்.

கடகம்: நல்லதைச் செய்வீர்கள், சமூகத்தில் மதிப்பு உயரும். அரசியல் வாதிகள் அதிஷ்ட தேவதைகளை அணைத்துக்கொள்வர்.

சிங்கம்: மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். வாகன நலனுக்கும் இன்று இடம் உண்டு.

கன்னி: நம்பிக்கை மோசடி நடக்கக்கூடும். நண்பர் ஒருவர்மீது உமது காலைவாரிவிடுவதற்கு முயற்சி எடுக்கலாம். செலவினங்களை கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத இடைக்காலப்பிரிவுக்கும் இடமுண்டு. தெய்வநம்பிக்கை சிறந்த மருந்து.

துலாம்: குடும்பம் இன்று கலகலப்பாக மாறும் இசைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும். பிள்ளைகளின் பெருமைக்கும் இடமுண்டு.

விருட்சிகம்: எண்ணியகாரியத்தில் ஏமாற்றம் தென்படும். நண்பர்கள் மூலம் நஷ்டம் அடைவதற்கு இடமுண்டு. கூட்டுவியாபாரத்தில் மோசடி நடக்கலாம். நன்றாகச் சிந்தித்தபின் செயலாற்றுக.

தனு: கனிவான நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள் பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நிர்வாக உத்தியோகத்தர்கள் செல்வாக்குவளர்பிறையாகும்

மகரம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள். பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும் சொந்தமாக தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும். அரசாங்க ஊழியராயின் பதவி உயர்வு கிடைக்கலாம்.

கும்பம்: புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும் புத்திரர்களுடைய செல்வாக்கு பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும் பூமியால் முன்னேற்றம் உண்டு.

மீனம்; சிந்தனையில் [illegible] மாற்றம் தென்படும் நண்பர் ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். தொழில்துறையில் மறைமுக எதிர்ப்புகளுக்கு இடமுண்டு முன்யோசனையுடன் நடக்கவும்.

[illegible]

க. வேலுப்பிள்ளை

## சமாதான நீதவான்



கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும், வர்த்தகருமான திரு. வே. சி பத்மநாதர் யாழ் மாவட்ட நீதிபரிபாலன பகுதிக்கான சமாதான நீதவானாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் யாழ் மாவட்ட நீதவான் திரு. யோகநாதன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கோண்டாவில் கிழக்கு கிராமமுன்னேற்றச் சங்கம், கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆகிய சங்கங்களில் செயலாளராக நீண்டகாலம் கடமையாற்றிய இவர், தற்போதும் இச்சங்கங்களிலும் கொக்குவில் இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்கம், இராமகிருஷ்ண வித்தியாலய அபிவிருத்திச் சங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி கோண்டாவில் கிளை கோண்டாவில் இந்து இளைஞர் மன்றமும் சனசமூக நிலையமும், ஸ்ரீஅற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் குமரன் விளையாட்டுக்கழகம், போன்ற பல சமூக ஸ்தாபனங்களில் உறுப்பினராகவும், பொறுப்பான பதவிகளிலும் இருந்து வருகிறார்.

## விஸ்வமடு கொலை வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

விஸ்வமடு கொலை வழக்கு யாழ். மேல்நீதி மன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஆகஸ்ட் 11ம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் 78ம் ஆண்டு மே 30ம் திகதி தாமோதரம்பிள்ளை சீனித்தம்பி தாமோதரம்பிள்ளை பாலசிங்கம் ஆகியோர் சரவணமுத்து செல்லையாவைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முதலாம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். தவராசா ஆஜரானார். 2ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம், சட்டத்தரணி ஆர். சிறீகாந்தா, சட்டத்தரணி திருமதி. சுரேந்திரன் ஆகியோர் ஆஜரானர்கள். அரசதரப்பில் சட்டத்தரணி பி. அரவிந்தன் ஆஜரானார்.

(ஈ)


# சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி80-

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், கவனம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

**"சிறந்த நடாத்துநர், சிறந்த சாரதி"**
**போட்டியை**

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் 'ஈழநாடு' பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடாத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் இம்மாதம் 25ம் திகதி முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும்படி யாழ் ரோட்டறிக்கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
பல் வைத்திய நிலையம்,
168 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

**சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்**

சிறந்த நடத்துநர் பெயர் ..................... சிறந்த சாரதி பெயர் .....................

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர் பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No ............)

அனுப்புபவர் பெயர்.......................... ஒப்பம்..........

விலாசம்..........................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NEW CAMBRIDGE**

திருநெல்வேலிச்சந்தி, மேல்மாடி
யாழ்ப்பாணம்.

ஆரம்பம் 14-5-80

- RADIO & ELECTRONIC WITH PRACTICAL
- SHORTHAND & TYPING
  காலை, மாலை, சனி, ஞாயிறு வகுப்புக்கள்.
- I. B. K. I. A. A. LONDON EXAM.
- ADVANCED & SPOKEN ENGLISH.

பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.
மேலதிக விபரங்கட்கு!
V. M PACKKIYANATHAN

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## உகண்டாவில் அதிகாரப்போட்டி

### நகரில் நடமாட்டம் இல்லை

(கம்பாலா)

உகண்டாவில் ஸ்திரமற்ற அரசியல் நிலைமை காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. நாட்டின் முழுக் கட்டுப்பாடும் தங்கள் கையில் இருப்பதாக இராணுவத்தினர் அறிவிக்கும் அதே நேரத்தில் ஜனாதிபதி பினைஸா தான் நாட்டின் உண்மையான தலைவராக இருப்பதாகத் தெரிய வருகிறது.

மாணவர்களுக்கான
ஆங்கிலப் பயிற்சி

3 ஆம் வகுப்பு New Method Seat Work 2-50
4 ஆம் வகுப்பு New Method Seat Work 3-75
5 ஆம் வகுப்பு New Method Seat Work 2-25
6 ஆம் வகுப்பு New Method Seat Work 2-50
8 ஆம் வகுப்பு New Method Seat Work 2-75

காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக ஸ்தாபனமாகிய எஸ். சின்னத்துரை பிரதர்ஸ் ஆதரவில் நடத்திய விளையாட்டுப் போட்டியில் பரிசு பெற்றோருக்கு சின்னத்துரை பிரதர்ஸ் அதிபரும் சமாதான நீதவானுமான திரு. சி. சின்னத்துரை பரிசுகளை வழங்குகிறார்.

## தெல்லிப்பளைக் கொலைவழக்கு

# 'சட்டத்தரணியைச் சந்திக்கச் சென்றவர் திரும்பவில்லை'

### மனைவி சாட்சியம்

(மாவிட்டபுரம்)

சம்பவதினம் வழக்கு ஒன்று தொடர்பாக 25 ரூபா பணத்துடன் சட்டத்தரணி ஒருவரை சந்திக்கச் சென்ற எனது கணவர் பின்னர் வீடு திரும்பவில்லை மறுநாள் அவர் கொலையுண்ட நிலையில் சுடலையில் கிடப்பதாக அறிந்து அங்கு சென்றபோது அவர் இரத்தவெள்ளத்தில் இறந்துகிடந்தார்

இவ்வாறு தெல்லிப்பழை மயானக் கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கொலையுண்டவரின் மனைவி இல்லையம்பலம் இராஜலட்சுமி கூறினார்.

இவ் வழக்கில் ஏழாலையைச் சேர்ந்த கந்தையா தில்லையம்பலம் என்பவரைக் கொலை செய்ததாக மல்லாகத்தைச் சேர்ந்த மாதன் மகாலிங்கம் என்பவர்மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இவ் வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

கொலையுண்டவரின் மனைவி இராஜலட்சுமி சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

சம்பவதினம் மாலை 6 மணி போல் கொலையுண்ட எனது கணவர் 25 ரூபா பணத்துடன் இராஜலிங்கம் என்பவருடன் அடிபட்ட வழக்குத் தொடர்பாக சட்டத்தரணி ஒருவரை சந்திக்கச் சென்றார். பின்னர் அவர் திரும்பிவரவில்லை. மறுநாள் அவரது சடலம் தெல்லிப்பழையையடுத்த சுடலையில் கிடப்பதாக அறிந்தேன். நானும், மகன் இரத்தினேஸ்வரனும் அங்கு சென்று பார்த்தோம் அப்போது நெஞ்சில் பலத்த வெட்டுக்காயத்துடன் இரத்த வெள்ளத்தில் எனது கணவர் இறந்துகிடந்தார்.

சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் குறுக்கு விசாரணையை முடித்துக்கொண்டபின் யாழ். பதில் சட்டவைத்திய அதிகாரி திரு. எஸ். திருவுடையான் வைத்திய அறிக்கையை சமர்ப்பித்தார்.

அடுத்து கொலையுண்டவரின் மகன் இரத்தினேஸ்வரனும் சாட்சியமளித்தார். மேல்விசாரணை ஒத்திப்போடப்பட்டது.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசுவும், எதிரி சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம் செல்வி கமலா தில்லையர், செல்வி மோகாந்தி செல்வரத்தினம் ஆகியோரும் ஆஜராகினார். (உ)

## கல்விப்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சாலைகளுக்கு வந்தபோதிலும் கடமைநேரத்தில் ஆசிரியர்கள் இல்லாதது, ஒழுங்கான நேரசூசிகை இல்லாதது ஆகியவை காரணமாக மாணவர்களின் பாடசாலை நேரம் வீணாவதாகத் தெரியவந்தது.

இப்படியான சம்பவங்கள் பல பாடசாலைகளிலும் இப்பொழுது தலை தூக்கி வருவதால், இது சம்பந்தமாக உரிய நடவடிக்கையை காலதாமதமில்லாமல் எடுப்பது குறித்து வடமாநில கல்விப்பணிப்பாளர் ஆலோசனை நடத்திவருகின்றார்.

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யந்திரத்தினால் கல்லுடைக்கும் தொழிலாளர் நன்மை கருதி யந்திர உரிமையாளர்களின் கருத்தரங்கொன்று இன்று காலை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள யாழ் மாவட்ட தொழிலாளர் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது. (ஈ-அ)

## சேவைநலம் பாராட்டு

(மன்னார்)

மன்னார் மாவட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் ஓய்வுபெற்ற 12 ஆசிரியர்களைக் கௌரவித்து இன்று புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் சேவைநலம் பாராட்டு விழா நடத்துகின்றனர். (ஏ)

## வாழ்க்கையில் விரக்தி:

# திருமணம் செய்து இரு மாதத்தால் தற்கொலை!

(பண்டத்தரிப்பு)

திருமணம் செய்து இரண்டு மாதங்களின்பின் வாழ்க்கையில் விரக்தியடைந்த வாலிபர் ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்ட பரிதாப சம்பவம் பண்டத்தரிப்பில் நடைபெற்றுள்ளது.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் என்னும் (23 வயது) இளைஞரே தற்கொலை செய்து கொண்டவராவார் இவரது மரணவிசாரணை யாழ். அரசினர் வைத்தியசாலையில் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

மரணவிசாரணையின் போது பிரஸ்தாபஇளைஞர் இருமாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்ததாகவும், மகிழ்ச்சியாக குடும்பம் நடத்திவந்ததாகவும் வாழ்க்கையில் விரக்தியடைந்ததினால் கிருமிநாசினி அருந்தி உயிரை மாய்த்திருக்கலாம் என்று கூறுவதாகவும் சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து தற்கொலையென்று தீர்ப்பு வழங்கப்பட்டது. (ச)

## வடக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர். நாம் யாழ்ப்பாணத்தை வேறுநாடாகக்கணித்திருந்தால் இந்தப்படையை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்திருக்கமாட்டோம். இந்தப் படையை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவருவதற்காக யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி எடுத்த முயற்சிகள் ஏராளம் அவரின் முயற்சியினால்தான் இப்படகுசேவை கிடைத்தது. அவருக்கு உறுதுணையாக மாவட்டஅமைச்சரும் செயல்பட்டார்.

"திரு. யோகேந்திரா திவகத்தைச்சேர்ந்தவர் என்பதால் தான் தீவக மக்களின் பிரச்சினைகளை அவரால் நன்கு உணர முடிகிறது. அதனால்தான்அவர் அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு உங்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றிவருகிறார். அவரின் சேவையால் யாழ் மாவட்டம் முழுவதுமே அபிவிருத்தியடையப்போகிறது.

"மாவட்ட அமைச்சர் உருவத்தில் சிறியவராக இருந்தாலும் மிகவும் திறமை மிக்க செயல்வீரர். அவரின் குறுகிய காலசேவையில் யாழ்ப்பாண மக்களின் நல்ல அபிப்பிராயத்தைப் பெற்றதோடு தமிழர்-சிங்கள மக்களை ஒற்றுமையாக்கும் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ளார். இந்த அரசு தமிழர், சிங்களவர் என்று எந்தவித பாகுபாடும் காட்டாது எல்லா இனமத மக்களுக்கும் ஒரே மாதிரியான சேவையையே செய்துவருகிறதென்ற நல்ல செய்தியை உங்கள் மத்தியில் தான் கூறியதாகத் தெரிவிக்கும்படி பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா என்னிடம் பணித்தார். அவரின் அந்த நல்ல ஆசிச் செய்தியை உங்கள் மத்தியில் எடுத்துக் கூறும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்" என்றார். (கெ)

## பஸ்நிலையத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கழிவுகளை மீன் சந்தையில் புதைத்து சுகாதாரசீர்கேட்டை உண்டுபண்ணும் நடவடிக்கையை உடன் நிறுத்த வேண்டும். (ச)

## அச்சுவேலி.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புகைச் செல்ல நான்புறப்பட்ட போது தொண்டமனாறு சந்தியில் 1ம், 2ம், 5ம் எதிரிகளுடன் கொலையுண்டவர் கதைத்துக் கொண்டு நிற்பதைக்கண்டேன் அவர்கள் சந்தோஷமானமுறையிலேயே கதைத்துக்கொண்டு நின்றனர். பின்னர் நான் கொழும்பு சென்றபின் 28ம் திகதிவீடுதிரும்பியபோதுதான் இக்கொலைபற்றி அறிந்தேன் என்றார்.

மேல் விசாரணை இம்மாதம் 14ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி ரி தம்பிரத்தினம் எதிரிகள் தரப்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம் செல்வி கமலா தில்லையர், செல்வி மோகாந்தி செல்வரத்தினம் ஆகியோர்ஆஜராகினர்.

## மரண அறிவித்தல்

### செல்வன் பிரபாகரன்

செல்வன் பிரபாகரன் காலமானார். இவர் இராஜேந்திசர்மா, (ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்), சந்திரவதனியின் புதல்வனும், துஷ்யந்தியின் சகோதரனும், வைத்தியநாதசர்மா (கோணேஸ்வரர் கோவில்), ரவீந்திரநாதசர்மா, ஜெகநாதன், இரகுநாதன், வீரகேசரி, கொழும்பு, மங்களேஸ்வரி, மதிவதனி ஆகியோரின் மருமகனுமாவார். பூதவுடல் நல்லூர்க்கந்தசுவாமி கோவில் பெரியசந்நிதி வீதியிலுள்ள இல்லத்திலிருந்து இன்று (14-5-80) காலை 10 மணியளவில் கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 5761

## மரண அறிவித்தல்

### திரு. செல்லப்பா கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் இலக்கம் 51, காங்கேசன்துறை வீதி பிரபல மருந்துச்சரக்கு வியாபாரியாகிய திரு. க. செ. கணபதிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் அம்மாப்பிள்ளையின் அன்புக் கணவரும், சட்டநாதன், சந்தானகோபால், தெய்வேந்திரம், குலநாயகி, தனபாக்கியலட்சுமி, நல்லைநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னம்மா, பாலாம்பிகாதேவி, செல்வமலர், தனலட்சுமி, கிருஷ்ணபிள்ளை (உதவி தபாலதிபர், பரந்தன்), செல்வராசா (நீர்ப்பாசன இலாகா, வவனிக்குளம்) ஆகியோரின் அன்பு மாமனுருமாவர். அன்னாரின் பூதவுடல் இன்று (14-5-80) புதன்கிழமை மாலை 4 மணிக்கு 32, சட்டநாதர்வீதி நல்லூரிலிருந்து ஈமைக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் 5769

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஆசிரியரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மே 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under No CE/8948/78 The Eelanaadu, P.O. Box 49, Telegram: "Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org